# மக்களே சிந்தியுங்கள்!

# உண்மை நிலையினை

# புரிந்து கொள்ளுங்கள்!!

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மைக்காலத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாகவும், அதன் காரணமாக கடந்த 07-08-1986 தொடக்கம் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டம் தொடர்பாகவும் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு திரிபுபடுத்தப்பட்ட பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக எம்மால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலான இவ்வேளையில், மக்களை முழுமையாக சென்றடையாது இருந்தமையால், எமது கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகளை பலரும் கொண்டிருக்கலாம். எனவே உண்மை நிலையினை மக்கள் மத்தியில் முன் வைப்பதே எமது தலையாய கடமையாகும்.

'ராக்கிங்' சம்பவத்தை மையமாக வைத்து குறிப்பிட்ட இயக்கமொன்றினால் மூன்று மாணவர்கள் நீதி விசாரணையின்றி கடுமையாக தாக்கப்பட்டதை ஆட்சேபித்தே எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும்

'ராக்கிங்' தொடர்பாக எமக்கு எதுவித கருத்து வேறுபாடும் இல்லை என்பதை 'ராக்கிங்' தொடர்பான எமது நிலைப்பாடு நன்கு வெளிப்படுத்தியிருந்தது.

'ராக்கிங்' என்பது உடலியல் ரீதியாகவோ, உளவியல் ரீதியாகவோ, ஒருவர் பாதிப்படையாதிருக்கும் வரை பாரதூரமானதன்று. புதிய மாணவர்களும் சிரேஷ்ட மாணவர்களும் புரிந்துணர்வு அடிப்படையில் பழகுவதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. இதற்கு மேலாக 'ராக்கிங்' என்ற போர்வையில் நடாத்தப்படுகின்ற பலாத்காரப் பிரயோகங்கள், அச்சுறுத்தல்கள், உடல் உள ரீதியில் பாதிக்கும் செயற்பாடுகள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படக் கூடாதவை. களைந்தெறியப்பட வேண்டியவை

இந்தவகையில் எமது போராட்டமானது பல்கலைக்கழக மாணவர் என்ற ரீதியில் பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கவென ஓர் நிர்வாகம் இருக்கக்கூடியதாக அந்த நிர்வாகத்துடன் தொடர்புபடாமல் எந்த ஒரு சரியான விசாரணையும் [illegible] எமது [illegible]வர்கள் தாக்கப்பட்டமையைத் தொடர்ந்தே எமது நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தை மேற்கொண்டோம். ஆனால் சரியாக விளங்கிக் கொள்ளாமலும் எமது கோரிக்கைகளின் நியாயத்தன்மையை புரிந்து கொள்ளாமலும், பத்திரிகைகளினாலும் ஒரு சில அமைப்புக்களினாலும் வெளியிடப்பட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை நாம் முற்றாக மறுப்பதுடன் அது தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் எமக்கு இருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய எம்மைப் பொறுத்தவரையில், விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்து, உயர்கல்வி ஸ்தாபனம் என்ற வகையில், விடுதலைக்கான பணியில் பல்வேறு காலத்தில், பல்வேறு வகையில் பங்களித்து வந்திருக்கின்றோம். சிறிலங்கா இனவெறி அரசு எமது ஜனநாயக உரிமைகளை மறுத்தபோது, தேச விடுதலைப் போராட்டத்தினை எமது மக்கள் மேற்கொண்டார்கள். ஜனநாயக உரிமைகள் எங்கிருந்து எவரால் மறுக்கப்படினும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். அதற்காக போராடவும் வேண்டும்.

எந்தவோர் பிரச்சினையும் அறிவுரீதியாக அணுகி, ஆராய்தலே சரியான நடைமுறை ஆகும். இந்த வகையில் பல்கலைக்கழகங்களில் ஓர் பிரச்சினையாக இருந்துவரும் 'ராக்கிங்' தொடர்பான பிரச்சினைக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஓர் முற்போக்கான தீர்வுக்கு முன்னின்று செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆரம்பத்தில் மாணவர்கள் மத்தியில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்து வந்திருப்பினும், இவ்வருடம் எல்லோரும் ஏகோபித்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வேலையில் ஈடுபட்டு இருந்தார்கள். இவ்வேளையிலேயே பல்கலைக்

மூகத்தில் 'ராக்கிங்' பாரதூரமாக இடம்பெறுகின்றது என குறிப்பிட்ட இயக்கத்தினர் ந டிக்கையில் இறங்கினர். 'ராக்கிங்' தொடர்பாக பெரும்பாலான மாணவர் கொண்டிருந் ருத்துக்கும் இவர்களுக்கும் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லாத போதும் இவர்கள் இ ிரச்சினையை கையாண்ட முறையே மாணவர்கள் மத்தியில் சர்ச்சையானதாக இருந்த திர்ப்புணர்வை ஏற்படுத்தியது.

உண்மையில் இப்பிரச்சினையை இவர்கள் எவ்வாறு கையாண்டிருக்க வேண்டும். 'ராக்கிங்'எ மாணவர் மத்தியிலிருந்து நீக்குவதற்காக, செயற்பட்டுக் கொண்டிருந்த மாணவர்களுடன் இணைந் 'ராக்கிங்' சம்பந்தமாக தெளிவுபடுத்தி, மாணவர்களை கருத்து ரீதியாக வளர்த்தெடுத்து உளரீதியா டடன்பட வைப்பதன் மூலமே இந்த ராக்கிங்' பிரச்சினைக்கு தீர்க்கமானதும், நிரந்தரமானதுமான தீர்வுக்கு முன்னின்று உழைத்திருக்க முடியும் இதனை விடுத்து பல்கலைக்கழக நிர்வாக நுடன் தொடர்புபடாமல் எந்தவொரு நீதி விசாரணையும் நடாத்தப்படாமல், மூன்று மாணவர்க தண்டிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக மாணவர்கள், நிர்வாகம் உறுதிப்படுத்தாத நிலையிலும் உட உள ரீதியில் பாதிக்குமளவிற்கு ராக்கிங்'கில் ஈடுபடுவதாக அறிக்கையும் வெளியிட்டிருந்தனர்.

இத்தகைய நிகழ்வுகளின் காரணமாகவும் குறிப்பிட்ட இயக்கத்தினரால், கடந்த கால களில் பல்கலைக்கழக மாணவர்கள் தமது இருப்பிடங்களிலேயே எவ்வித விசாரணையுமின் தாக்கப்பட்டமை காரணமாகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் தன்னிச்சையாகவே மாண வர்கள் கிளர்ந்தெழுந்து சில கோரிக்கைகளை நிர்வாகத்திடம் முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்தனர். சரியான ஸ்தாபனமயப்படாத நிலையில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தீர்க்கதரிசனமற்றவை என்பதை நாம் உணர்கிறோம். அவர்கள் முன்வைத் நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் நிறைவேற்றாத பட்சத்தில், பல்கலைக்கழக மானியங்க ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளப் போவதாக ஒரு நிபந்தனையாக கூறி இருந்தமை ப கலைக்கழகம் என்ற வட்டத்துக்குள் இருந்து தமது பிரச்சினையை நோக்கியதால் ஏற்பட்ட த றாகும். ஆனால் பிரச்சினையை உணர்வு ரீதியாக புரிந்து கொண்டு ஏகோபித்த எல்லா மாணவ களினாலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, இந்த விடயம் கடுமையான விமர்சன திற்கு உள்ளாக்கப்பட்டு கண்டிக்கப்பட்டது. எனவே உளவு ஸ்தாபனங்கள் ஊடுருவியுள்ள என்று வழமையான பல்லவியில் ஆதாரமின்றி அவதூறு புனையினும் அவ்வாறு நிகழுமளவிற் நாம் விழிப்பற்று இருக்கவில்லை என்பதை இங்கு உறுதிப்படுத்துகின்றோம்.

இதனைத் தொடர்ந்து அனைத்து மாணவர்களினதும் ஏகோபித்த அமைப்பான மாணவ அமைப்புக் குழுவினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தேச நலனுக்கு குந்தகம் ஏற்படா வகையில் மாணவர்களது ஜனநாயக உரிமைகளுக்கான கோரிக்கைகளாகவே இருந்தன. இவ சரியாக புரிந்து கொள்ளாமல் பத்திரிகைகளினாலும், சில 'பாடசாலை மாணவர்கள்' என் பெயரிலும், சில அமைப்புக்களினாலும் வெளியிடப்பட்ட உண்மைக்கு புறம்பான கருத்துக்க நாம் மறுக்கிறோம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். யாழ் மத்திய கல்லூரியின் பெயரை பயன்படுத்தி வெளியாகியிருந்த பிரசுரத்தில் நாம் ''பாதுகாப்புக்கோரி மாவட்ட இணைப்பதிக ரியிடம் கேட்க இருப்பதாய்'' மோசடி நோக்குடன் கூறப்பட்டிருந்தது. பாடசாலைகள் வி முறை நாட்களுக்காக மூடப்பட்டிருக்கின்ற இத் தருணத்தில் பாடசாலைகளின் பெயரில் து டுப் பிரசுரங்கள் வெளி வந்தமை எதனைக் காட்டுகிறது? மக்களே சிந்தியுங்கள்! நாம் எம உணர்வு பூர்வமான தேசப் பற்றை ஏற்கனவே தெளிவாக வெளியிட்டிருந்தும் இப்படியா பிரசுரங்கள் வெளி வந்தமை அவற்றை வெளியிட்டவர் தம் சுயமான சிந்தனையையும் கருத்து

சுதந்திரத்தையும் யாரிடமோ பறிகொடுத்தவர்களாகவே இருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது. அத்துடன் பல்கலைக்கழக சம்பவங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த நிர்வாகம் ஆதாரபூர்வமாக எதையும் வெளியிடாத போதும், முற்றும் அறிந்த முனிவர்கள் போல், எதுவித ஆதாரமுமின்றி அவதூறு புனைந்தனர். எது எப்படி இருந்தாலும் எம்மால் முன் வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தை அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும் ஆதரித்தன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கடந்த ஒரு வாரகாலமாக அனைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களினாலும் ஒருமித்து மேற்கொள்ளப்பட்ட இந்த வெகுஜன போராட்டம் எமது கோரிக்கைகள் தொடர்பாக நிர்வாகம் தந்திருக்கும் உத்தரவாதத்தை தொடர்ந்து வெற்றியளித்துள்ளது. எம்மால் நிர்வாகத்திடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் அது நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளோம். எமது போராட்டத்தில் ஏற்பட்டிருக்கும் இம் முன்னேற்றகரமான திருப்புமுனையானது. ஒன்றுபட்ட வெகுஜன. மாணவ சக்தியின் பலத்தை நிரூபித்துள்ளமை உண்மையை நிலைநிறுத்த உதவியுள்ளது.

நாம் அனைவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தினை ஐக்கியப்பட்டு முன்னெடுத்துக் கொண்டிருக்கும் அதே வேளை விடுதலையை மாசுபடுத்தக்கூடிய எத்தகையதோர் தன்மையையும் விட்டுவைக்க முடியாது. எமது இந்த போராட்டம் பொதுமக்கள் மத்தியில் விடுதலை இயக்கங்களுக்கு எதிரானது என்ற கருத்து எழுந்திருப்பின் அது தவறானதாகும். கடந்த காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு விடுதலை இயக்கங்களுடனும் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்களுடனும் இணைந்து விடுதலைக்கான பங்களிப்பில் ஈடுபட்டமை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது. இந்த வகையில் வெகுஜன சக்தி மீது நம்பிக்கை வைத்து பொது நோக்குடன் விடுதலைக்கான பாதையில் அனைவரும் ஐக்கியப்பட்டு செயற்படுவோம்.

அனைவரும் சிந்திப்போம்!

பத்திரிகை, கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்!!

தவறான அணுகுமுறைகளைக் களைந்தெறிந்து,

விடுதலைக்கான பாதையில் ஐக்கியப்பட்டு செயற்படுவோம்!!!

மாணவர் அமைப்புக் குழு
யாழ். பல்கலைக்கழகம்

16.08.1986